**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**நாள்** 21.08.2025

**அசல் வழக்கு எண்.396/2019**

**பி.சா.1 – சாந்தி, க/பெ.வெங்கடேசன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வாதி ஞானசௌந்தரி அவருடைய அவர் அண்ணன் பெருமாள் என்பவரிடமிருந்து 02.02.2006 அன்று புழக்கடை பாகத்தை வாங்கி உள்ளார். அதில் உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் உரிமை இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து உங்கள் கணவர் வாங்கியது இல்லை என்றால் சரிதான். அதே போல் நீங்களோ உங்கள் மகளோ கிரயம் வாங்கவில்லை என்றால் சரிதான். உங்கள் மாமியார் தெய்வானை அம்மாள் வழக்கு சொத்து குறித்து உயில் அல்லது செட்டில்மெண்ட் ஏதேனும் எழுதி வைத்தார்களா என்றால் எழுதி வைக்கவில்லை. ஞான சௌந்தரி வாதியிடமிருந்து உயிலோ செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார்களா என்றால் தெரியாது. உங்கள் மைத்துனர் சொத்து குறித்து ஏதேனும் ஆவணங்கள் உங்கள் பேரில் எழுதிக் கொடுத்தாரா என்றால் தெரியாது. உங்கள் கணவர் வெங்கடேசன் 1994 இல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். உங்கள் மாமியார் தெய்வானை அம்மாள் 03.04.2019 இல் இறந்துவிட்டார் என்றால் தெரியாது. உங்கள் மாமியார் உங்கள் கணவர் இறப்பிற்கு வந்ததாக சொன்னீர்கள் என்றால் வரவில்லை. உங்கள் மாமியார் எங்கே இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மாமியார் இறந்ததற்கு நீங்கள் சென்றீர்களா என்றால் எனக்கு தெரியாது செத்தாங்களா இருக்கிறார்களா என்பதே எனக்கு தெரியாது. ஏற்கனவே விசாரித்த போது இறப்புக்கு வந்ததாக சொன்னீர்கள் இப்பொழுது வரவில்லை என்று மாற்றி சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் உங்கள் கணவரின் இறப்புச் சான்று எந்த வருடம் வாங்கினீர்கள் என்றால் 1994 இல் வாங்கினேன். யார் வாங்கியது என்றால் என்னுடைய பங்காளி மூத்தார் கன்னியப்பன் வாங்கினார். அசல் வாரிசு சான்றிதழ் எங்கு உள்ளது என்றால் தெரியாது. உங்களது கணவர் இறப்பு சான்றிதழில் உங்கள் மாமியார் பெயரை மறைத்து வாங்கியுள்ளீர்கள் என்றால் எனக்கு தெரியாது. வாரிசு சான்றிதழ் கடந்த 29.11.2011 அன்று வாங்கியதாக உள்ளது என்றால் தெரியாது. நீங்கள்

தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் நீங்கள் வாங்கி போட்டது என்றால் தெரியாது. ஆவணங்கள் யார் வாங்கியது என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் யார் தாக்கல் செய்தது என்றால் தெரியாது. இந்த சொத்து அபகரிப்பதற்காக உங்கள் மாமியார் பெயரை மறைத்து வாரிசு சான்றிதழ் வாங்கி உள்ளீர்கள் என்றால் சரியில்லை. உங்கள் கணவர் வெங்கடேசன் என்பவருக்கும் அவரது அண்ணன் பெருமாள் என்பவருக்கும் பாகப்பிரிவினை நடந்ததாக ஒரு ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் அங்கு இருந்தீர்களா என்றால் நான் என் அம்மா வீட்டில் இருந்தேன் எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் உங்கள் மாமியார் தெய்வானை அம்மாள் கையொப்பம் போடவில்லை என்றால் தெரியாது. அதே போல் வாதி ஞானசௌந்தரி கையெழுத்து போடவில்லை என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்களை நீங்கள் பார்த்தீர்களா படித்து பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்க்கவில்லை. உங்கள் மாமியார் உயிருடன் இருந்த காலத்தில் 13.06.2018 நீங்களும் உங்களது மகள்களும் பாகப்பிரிவினை செய்து கொண்டீர்கள் என்றால் தெரியாது. பிரதிவாதி சான்றாவணம் 5 யார் வாங்கியது யார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது என்றால் தெரியாது. அதில் என்ன எழுதி உள்ளது என்று உங்களுக்கு தெரியாது என்றால் தெரியாது. ஆவணத்தில் உள்ள கையொப்பம் உங்களுடையது என்றால் என்னுடையதுதான். அதில் என்ன எழுதி உள்ளது தெரியாது என்றால் சரிதான். யார் எழுதியது என்றால் பத்திரம் எழுதியவர்தான் எழுதினார் பத்திரம் எழுதியவர் எழுதினாரா வழக்கறிஞர் எழுதுகிறாரா என்றால் பத்திரம் எழுதியவர்தான் எழுதினார். தயாரித்தவர் வழக்கறிஞர் என்று போடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அதில் உள்ள அளவுகள் எப்படி எழுதினார்கள் என்றால் தெரியாது. நீங்கள் உங்களுக்கு உரிமை இல்லாத பாகம் இல்லாத சொத்துக்களை எழுதிக் கொண்டீர்கள் என்றால் தெரியாது. அந்த பாகப்பிரிவினை குறித்து உங்கள் மாமியார் கேஸ் போட்டார்கள் என்றால் தெரியாது. சர்வே எண் 1694 குறித்து யாரும் சொத்து எழுதி கொடுக்கவில்லை என்றால் தெரியாது. அந்த சொத்து குறித்து உங்கள் கணவரோ அல்லது பிள்ளைகளோ ஆவணம் ஏதும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் தெரியாது. மேற்படி சர்வே நம்பர் குறித்து யார் ஆவணங்கள் எழுதி தரவில்லை நீங்களே எழுதிக்

கொண்டீர்கள் என்றால் சரியில்லை. ஆவணத்தில் வரைபடம் இணைத்துள்ளீர்கள் அதில் வடக்கு தெற்கு புழக்கடையில் 40 அடி என்று எழுதப்பட்டுள்ளது என்றால் அது நாங்கள் எழுதவில்லை முனிசிபாலிடியில் கொடுத்ததை வைத்து எழுதப்பட்டது. முனிசிபாலிடியில் வந்ததற்கான ஆவணம் இல்லை என்று சொன்னால் சரி இல்லை. நீங்களும் சர்வேயரும் சேர்ந்து கொண்டு தவறுதலான வரைபடம் உருவாக்கினீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் பொய்யான ஆவணம் தயார் செய்தீர்கள் என்றால் சரியில்லை. 5ம் பிரதிவாதியுடன் சேர்ந்து கொண்டு ஆவணம் பொய்யாக உருவாக்கினீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் பெயரளவில் ஏற்படுத்திய பாகப்பிரிவினை செல்லத்தக்கது அல்ல என்றால் சரியில்லை. அதேபோல் 1984 ஆம் ஆண்டு உங்களது கணவர் வெங்கடேசன் மற்றும் அவரது சகோதரர் அண்ணன் பெருமாள் ஏற்படுத்திய பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்றால் சரியில்லை. வாதிக்கு உரிமை உள்ள சொத்துக்களை ஏமாற்ற வேண்டி பொய்யான பாகப்பிரிவினை பத்திரங்களை தயாரித்து வழக்கில் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. 1694 சர்வே எண் ல் வாதிக்கு நான்கில் ஒரு பாகம் உள்ளது என்றால் சரியில்லை. 1693 சர்வே எண் ல் உங்கள் மைத்துனருக்கு சொந்தமான சொத்தில் வாதிக்கு பாகம் சென்று விட்டது ஆகவே உங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரி இல்லை. வாதிக்கு அம்மா சொத்தில் பாகம் உள்ளது என்றால் சரி இல்லை. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியில்லை. 22.07.2019 அன்று வழக்கறிஞர் வாயிலாக உங்களுக்கும் 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 5வது பிரதிவாதியுடன் சேர்ந்து போர்ஜரியாக ஆவணம் தயாரித்ததாக ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி உள்ளார்கள். வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் கொடுத்தீர்களா என்றால் கொடுக்கவில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.